மங்கையர், ஆடவர்
மனதைக் கொள்ளை
கொள்ளும்
வண்ண வண்ணப்பட்டு,
பருத்தி புடைவைக் கடல்
சீமாட்டி
ஜவுளி சமுத்திரம்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கல்யாண முகூர்த்தப்
புடைவைகளின்
கைராசியான ஸ்தாபனம்
சீமாட்டி
ஜவுளி சமுத்திரம்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 09 புதன்கிழமை (24 - 11 - 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 361

# தொண்டமானின் தொழிலாளர் காங்கிரஸ் ஐ. தே. க. அரசிலிருந்து வெளியேற முடிவு?

## ஊரடங்கு நீக்கம்

யாழ்ப்பாணம் மாவட்டம் மற்றும் மன்னாரிலும் அமுலில் இருந்து வரும் ஊரடங்குச் சட்டம் இன்று காலை 6 மணியுடன் நீக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது.

கடந்த 12 ஆம் திகதி மாலை 5 மணி முதல் 277 மணித்தியாலங்கள் இந்த ஊரடங்கு உத்தரவு அமுலில் இருந்தது. (உ-எ)

## அளவெட்டி மோதலில் இரு வேங்கைகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், நவ. 24

நேற்று முன்தினம் மாலை அளவெட்டிப் பகுதியில் சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகள் மீது இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தினர்.

இதனைத் தொடர்ந்து விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. இதில் இரண்டு விடுதலைப் புலிப் போராளிகள் வீரச்சாவடைந்னர்.

கப்டன் வெள்ளி அல்லது நியூட்டன் (செல்வநாயகம் சசிகரன் புன்னாலைக்கட்டுவன் வடக்கு), லெப்டினன்ட் கதிரவன் அல்லது ஹெலிமாமா (சின்னையா சிவராசா — பளை) ஆகியோரே வீரச்சாவடைந்தனர். (உ-த)

## படையினர் வெளியேறிய பின் மன்னார் பெரு நிலப்பரப்பில் மீண்டும் மக்கள் குடியேற்றம்

யாழ்ப்பாணம், நவ. 24

மன்னார் பெரு நிலப்பரப்பில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் வெளியேறிய பகுதிகளில் தமிழ் மக்கள் மீண்டும் குடியேறி வருகின்றனர்.

ஸ்ரீலங்கா இராணுவத்தினால் அழிவுக்குள்ளான நெல் வயல்களில் மீளவும் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

குறிப்பாக அடம்பன், நானாட்டான் பகுதிகளில் மக்கள் விவசாயச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் தற்போது மாவீரர் தின நிகழ்ச்சிகளும் அங்கு எழுச்சிபூர்வமாக இடம் பெற்று வருகின்றன. (உ-த)

## மட்டக்களப்பு மக்களுக்கு விசேட அடையாள அட்டை

### ஸ்ரீலங்கா இராணுவம் அறிவிப்பு

கொழும்பு, நவ. 24

மட்டக்களப்பு மாவட்டத்தில் வசிப்பவர்கள் அனைவருக்கும் விசேட அடையாள அட்டை வழங்கப்படும் என்றும் —

இந்த அட்டைகள் வழங்கப்படுவது அடுத்த மாத பிற்பகுதியில் ஆரம்பமாகும் என்றும் —

மட்டக்களப்பு மாவட்ட பாதுகாப்பு இணைப்பு அதிகாரி பிரிகேடியர் லொஹான் குணவர்தனா தெரிவித்துள்ளார்.

இராணுவத்தால் வழங்கப்படும் விசேட அடையாள அட்டையை ஒவ்வொருவரும் கட்டாயமாகத் தம்முடன் கொண்டு செல்ல வேண்டும் என்றும் —

வர்த்தக மற்றும் உத்தியோக அலுவல்கள் தொடர்பாக மட்டக்களப்புக்கு வருபவர்கள் தற்காலிக பெர்மிட் பெற்றுக் கொள்ள வேண்டியதில்லை என்றும் பிரிகேடியர் குணவர்தனா தெரிவித்தார்.

## யாழ். பல்கலைக்கு பெரும் நிதி நெருக்கடி!

யாழ்ப்பாணம், நவ. 24

புதிய கல்வியாண்டில் யாழ். பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டிருப்பதால்—

யாழ். பல்கலைக்கழகம் பெரும் நிதி நெருக்கடியை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவே பல்கலைக்கழகச் செலவினங்களுக்கு நிதி ஒதுக்கப்படுவது தெரிந்ததே.

இதனாலேயே இம்முறை யாழ்.பல்கலைக்கழகம் பெரும் நிதி நெருக்கடியை எதிர்நோக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

இதுவரை யாழ். பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு என ஒதுக்கப்படும் நிதியும் கடந்த ஜூலை மாதம் முதல் வெட்டப்பட்டிருப்பதால் நிலைமை இன்னும் மோசமடைந்திருக்கிறது.

புதிய கல்வியாண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களிலும் அரைவாசி எண்ணிக்கையானோர் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால்—

அவர்கள் போதனைக்கு யாழ். பல்கலைக்கழகத்துக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தோட்டங்களை நிர்வகிக்கும் விடயத்தில் கருத்து வேறுபாடு

கொழும்பு, நவம்பர் 24

ஜனாதிபதி விஜேதுங்கா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசில் இருந்து வெளியேறுவதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தயாராகி வருவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன;

மலையகத்தில் உள்ள அரசுக்குச் சொந்தமான பெருந்தோட்டங்களை நிர்வகிக்கும் நிறுவனங்களின் ஒப்பந்த காலத்தை நீடிப்பது தொடர்பான விஷயம் குறித்து ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கும் இடையே தீவிர கருத்து வேறுபாடு ஏற்பட்டிருப்பதே இதற்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டது;

ஒப்பந்த காலத்தை நீடிப்பதற்கு நிறுவனங்கள் சமர்ப்பித்துள்ள நிபந்தனைகளை அரசு ஏற்கும் பட்சத்தில் அரசாங்கத்தில் இருந்து அமைச்சர் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வெளியேறிவிடும் என்று அரசின் உயர் நிலை வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்புச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டா - அரசுத் தரப்பு பேச்சு தீர்வின்றி முடிந்தது

பெருந்தோட்ட நிர்வாகம் குறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுடன் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்காக, காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமானுடன், அரசின் உயர்நிலைக் குழு ஒன்று நேற்று முன்தினம் பேச்சுவார்த்தை நடத்தியது.

அரசுக்குழுவுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமை வகித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சிறிசேன குரேயும் அமைச்சர் கே. என். சொக்ஸியும் அக்குழுவில் இடம்பெற்ற ஏனைய உறுப்பினர்கள் ஆவர்.

மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாக நடைபெற்ற அப்பேச்சுவார்த்தை தீர்வு காணப்படாது முடிவடைந்தது.

அதனைத் தொடர்ந்து அமைச்சர் தொண்டமான் நேற்றுக் காலை வெளிநாடு பயணமானார்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துக்கு கடந்த 17 ஆண்டுகளாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நாடாளுமன்றத்தில் ஆதரவு அளித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## தி.மு.க.பிளவுண்டது!

சென்னை, நவ. 24

தி.மு.க. பிளந்து விட்டது; முடி முதல் அடி வரை செங்குத்தாக, இரண்டாகப் பிளந்துவிட்டது.

— இவ்வாறு பி.பி.ஸியின் சென்னை செய்தியாளர் சாம் ராஜப்பா நேற்று பி.பி.ஸிக்கு அனுப்பிய கண்ணோட்டத்தில் தெரிவித்தார்.

தி.மு.கவில் இருந்து ஏற்கனவே வெளியேற்றப்பட்ட வை.கோபாலசாமி, தி.மு.கவில் இருந்து நேற்று முன்தினம் வெளியேற்றப்பட்ட ஒன்பது மாவட்டச் செயலாளர்கள் மற்றும் கட்சியில் பதவி வகிப்பவர்களுடன் நேற்று கலந்தாலோசித்தார்.

அதன் முடிவில் தி.மு.கவின் உண்மையான தலைவன் தானே என்று கோபாலசாமி அறிவித்தார்:

கருணாநிதியை தி.மு.க. தலைமையகமான அண்ணா அறிவாலயத்தில் பொதுக் குழுவைக் கூட்டுமாறும்—

அப்படிச் செய்தால் யாருக்குப் பெரும்பான்மை ஆதரவு இருக்கிறது என்பதை தாம் நிரூபிக்க முடியும் என்றும் வை. கோபாலசாமி

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஒன்பது மாவட்டச் செயலாளர்கள் உட்பட கோபாலசாமி அணியினர் கூண்டோடு வெளியேற்றம்

சென்னை, நவ. 24

வை. கோபாலசாமிக்கு ஆதரவாகச் செயற்பட்ட தி.மு.கவின் எட்டு மாவட்டச் செயலாளர்கள் தி.மு.கவிலிருந்து நேற்று முன்தினம் வெளியேற்றப்பட்டனர்.

கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக அவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டதாக தி.மு.க. தலைமைப்பீடம் அறிவித்தது.

எம். கண்ணப்பன் (கோவை), கணேசமூர்த்தி (பெரியார் மாவட்டம்), மீனாட்சி சுந்தரம் (தஞ்சை கிழக்கு), செஞ்சி இராமச்சந்திரன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஞாயிறன்று இ.தொ.கா. இறுதி முடிவு எடுக்கும்

கொழும்பு, நவ. 24

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் தொடர்ந்து அங்கம் வகிப்பதா? இல்லையா? எடுக்கப்பட வேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் என்ன? — இவை குறித்து இம் மாதம் 28 ஆம் திகதி (ஞாயிறு) நடைபெறவுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய மாநாட்டில் முடிவெடுக்கப்படவுள்ளது.

இ. தொ. கா. பொதுச் செயலாளரும் ராஜாங்க அமைச்சருமான எம். எஸ். செல்லச்சாமி பி.பி.ஸி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

மலையகத்தில் உள்ள பெருந் தோட்டங்களின் நிர்வாகங்கள் குறித்து இ. தொ. கா. அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ள கோரிக்கைகள் வருமாறு;

★ தோட்ட நிர்வாகத்தை அவற்றை நிர்வகித்து வரும் உள்ளூர் நிறுவனங்கள் சீர்குலைத்து விட்டன. எனவே பெருந்தோட்ட நிர்வாகங்களை வெளிநாட்டு நிறுவனங்களிடம் கையளிக்கப்பட வேண்டும்.

★ அரசுக்குச் சொந்தமான சில நிறுவனங்கள் மக்கள் மயமாக்கப்பட்ட போது அவற்றின் 10 சதவீத பங்குகள் அவற்றில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வழங்கியது போன்று, பெருந் தோட்டத் தொழிலாளர்களுக்கும் இச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### டி.பி.யின் கருத்துக்குப் பதிலடி!

## இலங்கையில் உள்ளது இனப்பிரச்சினையே!

### லண்டன் மாநாட்டில் தீர்மானம்

லண்டன், நவ. 24

இலங்கையில் இருப்பது இனப்பிரச்சினையல்ல; அது பயங்கரவாதப் பிரச்சினையே என்று ஜனாதிபதி விஜேதுங்க கூறிவரும் கருத்து—

லண்டனில் இலங்கை இனப் பிரச்சினை தொடர்பாக நடைபெற்ற ஒரு மாநாட்டில் நிராகரிக்கப்பட்டது.

''இலங்கையில் ஜனநாயகத்துக்கும் நீதிக்குமான காங்கிரஸ்'' என்ற அரசு சாராத அமைப்புகளின் மாநாடே கடந்த சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் லண்டனில் நடைபெற்றது.

இலங்கையில் அகதிகள் பராமரிப்பு மற்றும் புனர்வாழ்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ள அரசு சாராத அமைப்புகள் இந்த மாநாட்டில் பங்குபற்றின.

ஜனாதிபதி விஜேதுங்கவின் கருத்தை நிராகரித்த மாநாடு, இலங்கையில் நடப்பது இனப் போர் தான் என்ற கருத்தை ஏற்றுக் கொண்டது.

இதனைத் தீர்க்க எல்லாத் தரப்புகளுடனும் கலந்தாலோசிக்க வேண்டும் என்றும் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அரசும் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் அதே போல விடுதலைப் புலிகளும் தம்வசம் உள்ள கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### இனப்பிரச்சினைக்குத் தீர்வு:

## சிங்களப் பேரினவாத போக்கினால் சிக்கல்!

### அமைச்சர் அஸ்வர் கூறுகிறார்

கொழும்பு, நவ. 24

★ பௌத்த தர்மத்தைச் சிங்களப் பேரினவாதத்துடன் குழப்பியடிப்பது தான் இன்று வடக்கு, கிழக்கில் இரத்த ஆறு ஓடுவதற்குக் காரணமாகும்.

★ சிங்களப் பேரினவாத அணுகுமுறை காரணமாகவே வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாமல் இருக்கிறது.

★ சிங்களப் பேரினவாத அணுகுமுறையைக் கைவிட்டு — பௌத்த தர்மத்தின் அடிப்படையில் — மனிதாபிமான நோக்கில் — பிரச்சினையை நாம் அணுகினால், விரைவில் தீர்வு காணலாம்.

இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் கூறினார் முஸ்லிம் கலாசார இராஜாங்க அமைச்சர் ஏ. எச். எம். அஸ்வர்.

மனித நேயம் மற்றும் உறுதிப்பாடு குறித்து சிந்திக்கும் நேரம் வந்துவிட்டது என்றும் அவர் சொன்னார். (உ-3)

## கொட்டும் மழையின் மத்தியில் நேற்று அஞ்சலி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 24

மாவீரர் வார மூன்றாம் நாளான நேற்று கொட்டும் மழையின் மத்தியிலும் அஞ்சலி நிகழ்வுகள் சிறப்பாக நடந்தன.

மாவீரர் நினைவுப் பந்தல்களுக்குப் பெரும் எண்ணிக்கையான மக்கள் சென்று மண்ணின் விடுதலைக்காக மடிந்த மாவீரர்களுக்கு தீப அஞ்சலியும், மலர் அஞ்சலியும் செலுத்தினர்.

நேற்றுக் காலையிலிருந்தே பெரும் மழை பெய்யத் தொடங்கியது. எனினும் மாவீரர் நினைவுப்பந்தல்கள், அரச அலுவலகங்கள், பொது நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளில் கொடி வணக்கத்துடன் அஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பமாகின.

குடா நாட்டின் சகல பகுதிகளிலும் ஆங்காங்கே அமைக்கப்பட்ட நினைவுப் பந்தல்களிலும், கொட்டகைகளிலும் மாவீரர் திருவுருவப் படங்களுக்கு மக்கள் அஞ்சலி செலுத்தினர். மாவீரருக்கு அஞ்சலி செலுத்துவது மக்களின் அன்றாடப் பணிகளில் ஒன்றாகிவிட்டது.

எழுச்சிக் கீதங்கள் ஒலித்த வண்ணமிருக்க அஞ்சலி நிகழ்வுகள் எங்கும் சிறப்பாக நடைபெற்றதாக எமது பிரதேசச் செய்தியாளர்கள் அறிவிக்கிறார்கள். கிராமப் பகுதிகளில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி




உவர் தொண்டாவுக்கு அமைச்சர் பதவி நித்திய மிரட்டல் ... மாதிரித்தான்

## மனித உரிமைகள் பிரதிநிதி கொழும்பில் பேச்சுவார்த்தை

கொழும்பு, நவ. 24

பிரபல ஐரோப்பிய மனித உரிமை இயக்கவாதியான திருமதி கிறிஸ்டியன் ஒடி கொழும்புக்கு விஜயம் செய்து பல மனித உரிமைக் குழுக்களுடன் பேச்சுக்கள் நடத்தினார்.

கொழும்பில் உள்ள சமூக, சமய நிலையத்தின் அலுவலகத்தில் வைத்து கடந்த 11ஆம் திகதி மனித உரிமை குழுக்களின் பிரதிநிதிகளை அவர் சந்தித்தார்.

பிரிட்டிஷ் தொழிற்கட்சி எம்.பியும் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினருமான திருமதி கிறிஸ்டியன் ஒடி ஏற்கனவே மனித உரிமைக்குழு ஒன்றுக்குத் தலைமை வகித்து கொழும்பு வந்து, மனித உரிமை மீறல் பற்றிய குற்றச்சாட்டுகள் பற்றி விசாரணை நடத்தியிருந்தார்.

அப்போது அவர் சமர்ப்பித்த அறிக்கையைத் தொடர்ந்து, ஐரோப்பிய நாடாளுமன்றம் தீர்மானம் ஒன்றை ஏகமனதாக நிறைவேற்றியது.

இலங்கையில் தடுப்புக் காவல் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்களை அரசு வெளியிட வேண்டும் என்றும் —

இலங்கையில் சுமார் 60 ஆயிரம் பேர் கொல்லப்பட்டோ அல்லது காணாமற்

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Prima Lohmann சிவப்பு, வெள்ளை பேட்டுக்குஞ்சுகள், Hyline சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ செண்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (28160)

### தேவை

வெற்று எண்ணெய் பரல்களை விற்பனை செய்ய விரும்புவோர் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இல. 10, செம்பியன் லேன், கொக்குவில். (சி-6387)

### தவறிவிட்டது

தேசிய அடையாள அட்டை(இல. 332511017V), குடும்ப அட்டை (இல. 00081930071) மற்றும் அதி முக்கிய ஆவணங்களுடன் ஒரு கோவை (File) மருதனார்மடம் அம்மா புத்தகசாலைக்கும், கொக்குவிலுக்கும் இடையில் கைதவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவுக. சன்மானம் தரப்படும். அநு. வை. நாகராஜன் அதிபர், தாவடி இ. த. க. பாடசாலை. (6815)

### தையல் வகுப்புகள்

Scientific Dress Making புதிய வகுப்புகள் 01-12-93 இல் ஆரம்பம். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: இல. 376, நாவலர் வீதி, கைலாசபிள்ளையார் கோயிலடி, யாழ்ப்பாணம். (28146)

### அப்பியாசக்கொப்பி

மாணவர்களின் சீருடைகள் பிரகாசமான வெண்மையுடன் விளங்கிட மில்க்வைற் நீலசோப், மில்க்வைற் சலவைத்தூள் உதவுகின்றன! 25 மில்க்வைற் நீலசோப் மேலுறைகள், சலவைத்தூள் வெற்றுப்பைக்கெட்டுகள் தருவோருக்கு 1 அப்பியாசக் கொப்பி அன்பளிப்பு. மில்க்வைற். (சி-6389)

### ஆண்டு 4 வினாத்தாள்

எமது நிறுவனத்தால் 21-11-93 ஞாயிறு வெளியிடப்பட்ட ஆண்டு 4 (புலமைப்பரிசில் 1994) வினாத்தாள்களை எமது வாடிக்கையாளர்கள் பெற்றுக்கொள்ளலாம். அடுத்த வினாத்தாள் 05-12-93 வெளியிடப்படும். புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (28149)

## அறிவித்தல்

விழிப்புலவலு இழந்தோர் (கண்பார்வையற்றோர்) அனைவரையும் கீழ்க்காணும் தமிழர் புனர்வாழ்வுக் கழக செயலகங்களில் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் — தலைமைச் செயலகம், கொக்குவில்.
" " " — காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.
" " " — மந்திகை, பருத்தித்துறை.
" " " — மருதங்கேணி வீதி, நாகர்கோவில்
" " " — கண்டி வீதி, சாவகச்சேரி.
" " " — கண்டி வீதி, பளை.
" " " — பண்டிதர் குடியிருப்பு, கெற்பேலி.

[28122]

## விவசாய பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம், நவ. 24

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடத்தும் விவசாயப் பயிற்சி வகுப்புகளின் தொடரில் நாளை வியாழக்கிழமை வகுப்புகள் நடைபெறவுள்ள இடங்கள் வருமாறு:

★ உடுவில், சுன்னாகம் முத்தமிழ் மன்றம் காலை 10 மணி.

★ சாவகச்சேரி கல்வயல் சனசமூக நிலையம் காலை 10 மணி. (க)

## புதிய பொலீஸ் மா அதிபர் பிராங் டி சில்வா

கொழும்பு, நவ. 24

புதிய பொலீஸ் மா அதிபராக பிராங்க் டி சில்வா நியமிக்கப்பட்டிருக்கிறார்.

எதிர்வரும் திங்கட்கிழமை இவர் பதவி ஏற்றுக்கொள்வார்.

பொலீஸ் சேவையில் இப்போது 67 ஆயிரம் பேர் உள்ளனர். (ஒ—எ)

பட்டப்பின் கல்வி தகைமை 1992/93

## கற்கை நெறிக்கு பதிவு செய்தல்

பட்டப்பின் கல்வித் தகைமை 1992/93 கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களை 1993-12-20ஆம் திகதிக்கு முன் பதிவு செய்யும்படி கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இவர்களின் பெயர்ப் பட்டியல் ஒன்றும் பல்கலைக்கழக அறிவித்தல் பலகையில் போடப்பட்டுள்ளது.

— பதிவாளர்.

யாழ்ப்பாணப் - பல்கலைக் கழகம்.
22-11-1993

(சி-6385)

## இரத்தினக்கல் வர்த்தகர்கள் போராட்டம்

கொழும்பு, நவ. 24

இரத்தினபுரியில் இரத்தினக்கல் தோண்டும் ஒப்பந்தம் ஒன்றை அரசு தென்னாபிரிக்க நாட்டு நிறுவனம் ஒன்றுக்கு வழங்கியிருப்பதற்கு இலங்கை இரத்தினக்கல் வர்த்தகர்கள் ஆட்சேபனை தெரிவித்துள்ளனர். அரசின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அவர்கள் அடுத்த மாதம் முதல் திகதியில் இருந்து போராட்டங்களை ஆரம்பிக்கவுள்ளதாக பி.பி.ஸி. தெரிவித்தது. (உ-6-5)

## ப. நோ. கூ. ச. உதவி

சுழிபுரம், நவ. 24

மாவீரர் வாரத்தையொட்டி சங்கானை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தினர் கிளையில் உள்ள வறிய குடும்பம் ஒன்றுக்கு ரூபா 250 பெறுமதியான உணவு வகைகளை இலவசமாக வழங்கவுள்ளனர். (இ-28)

# மக்களின் விடுதலை வேள்வியில் ஆகுதியானவர்கள் மாவீரர்கள்

எமது தேசத்தின் வரலாறு ஒவ்வொரு மாவீரரதும் குருதியாலும் எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது. மாவீரர்களின் தியாகத்தால் அங்குலம் அங்குலமாக விடுவிக்கப்படும் எம் தேசம் உலகவரலாற்றிலே எங்கேயும் கண்டிராத தனித் தன்மையும் பெருமையையும் கொண்டிருக்கிறது.

தமது இளமை வாழ்வை எம்மண்ணுக்காகவே அர்ப்பணித்து இந்த மண்ணின் மூச்சுக் காற்றோடு கலந்த இவர்கள் நம் ஒவ்வொருவரதும் மனங்களிலும் வைத்து வணங்கப்பட வேண்டியவர்கள். சாதி மத பிரதேச வாதங்களுக்கு அப்பாற்பட்டு இந்த மண்ணின் விடிவு, மக்களின் விடுதலை என்ற விரிந்த இலட்சியத்தை மனதிலே வரித்துக் கொண்டு விடுதலை வேள்வியில் தம்மை ஆகுதியாக்கியவர்கள்.

எரிந்துபோன ஒவ்வொரு எதிரி முகாம்களும் குமுறிக் கொந்தளிக்கும் அலை கடல்களும் இவர்கள் ஒவ்வொருவரினதும் கதையினைக்கூறும். எமது மண் விடுவிக்கப்பட வேண்டும் என்பதற்காக எதிரியோடு நேருக்கு நேர் களமாடி வீழ்ந்தவர்களும், வெடிமருந் தேற்றிய வாகனங்களில் எதிரியோடு மோதி வெடித்தவர்களும் இன்னும் பலவிதமான வீரச்சாவுகளை அடைந்து முகங்களறியாது மறைந்து போனவர்களையும் சுமந்து எமது தேசம் பெருமை கொள்கிறது.

உறுதிமிக்க புரட்சிகரமான கொள்கையுடைய தலைவன் அணியிலே எமது போராட்டம் பல பரிமாணங்களைக்

### மாவீரர் வார சிந்தனை

கடந்து கொண்டிருக்கிறது. பெண்மையும் வீரமே என்ற புதிய மரபினை உலகறியச் செய்து இந்த மண்ணினதும் சமூகத்தினதும் விடுதலைக்காக ஐந்நூறிற்கும் மேற்பட்ட பெண் மாவீரர்கள் இந்த மண்ணிலே வித்தாகியுள்ளனர். ஆண்களுக்குப் பெண்கள் எவ்விதத்திலும் சளைத்தவர்களல்லர் என்பதை நிரூபணமாக்கி இவர்களது வரலாறு உலகை வியக்கவைத்திருக்கிறது. சமூகத்தில் பல உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலிருந்து ஒருபாலாரின் வளர்ச்சி ஏறத்தாழ ஒரு தசாப்தத்திற்குள்ளே வியத்தகு வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது என்று தமிழீழம் தலை நிமிர்கிறது.

முழுமையான வெற்றிக்கு ஆண், பெண் என்ற பேதமற்ற பலமான சக்தியே வழி கோலும் என்ற ஆறாயிரத்து நூறு மாவீரர்களினதும் தியாகங்கள் சான்று கூறும்.

எமது மண்ணின் விடிவுக்கு விலையாகக் கொடுத்த இந்த மாவீரர் நினைவுகளில் இவர்களின் கனவுகளை நெஞ்சோடு சுமந்து செல்கிறோம், நீண்டு பரந்த, கல்லறைகளில் மண்டியிட்டு, நவம்பர் 27ந் திகதியினை மாவீரர் தினமாகக் கொண்டு அவர்களை நினைவு கூருகிறோம்.

நவம்பர் 26 ஆம் திகதி நள்ளிரவில் கூர்விடும் தீபங்களில் பிரகாசித்தபடி பூத்திருக்கும் அவர்களின் முகங்களை, நினைவுகளை மனதிலிருத்தி எங்கள் குனிந்த தலைகளை மீண்டும் நிமிர்த்தி நிமிர்ந்து நிற்கிறோம். இந்த தேசம் நிமிர்வதற்காக வேங்கைகள் அணியில் செல்வோம் என்ற இறுதி இலட்சியத்துடன் எங்கள் பாதங்களை ஆழமாகப் பதித்துக் கொள்வோம். மாவீரர்களின் குருதிச்சுவடுகள் பற்றி உறுதிமிக்க எமது தேசத்தலைவனின் பின்னே உறுதியெடுத்துக் கொள்வோம்.

(தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை வெளியிட்டது)

## அறிவித்தல்

### திருக்குடும்ப கன்னியர் மடம்

யாழ்ப்பாணம்.

உயர்தர மாணவர் கவனத்திற்கு.

12ஆம், 13ஆம் ஆண்டு மாணவர்களுக்கான ஆண்டிறுதிப் பரீட்சை 29-11-1993 திங்கட்கிழமை ஆரம்பமாகும். நேரசூசியை பாடசாலை விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.

— உப அதிபர்.

[28163]

## ஆழ்ந்த அனுதாபம்

அமரர்

### திரு. மு. கணபதிப்பிள்ளை ஜே. பி.

அவர்கள்

மறவன்புலவைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியரும், மதபெரியாரும், சமூக சேவையாளரும் — எமது நிறுவனத்தின் நிறுவனர் திரு. க. சச்சிதானந்தன் அவர்களின் தந்தையாருமாகிய அமரர் திரு. முருகேசு கணபதிப்பிள்ளை அவர்கள் 19-11-1993இல் சென்னையில் சிவபதம் அடைந்தமை குறித்து —

எமது ஆழ்ந்த அனுதாபங்களை அமரரின் குடும்பத்தார், உறவினர், நண்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அறவழிப் போராட்டக் குழு
(N V D A G)

கைதடி துணாவில்,
சாவகச்சேரி.

[28162]

## கண்ணீர் அஞ்சலி

### வேம்படி மகளிர் கல்லூரி

பழையமாணவர் சங்கம்

எமது சங்கத்தின் உபகாப்பாளராயிருந்த

### திருமதி இராசம்மா சோமசுந்தரம்

அவர்களின் பிரிவால் துயருறும்:
வேம்படி பழைய மாணவர்கள்.

(சி-6391)

## 4ஆம் ஆண்டு ஞாபகார்த்தம்

தோற்றம்:
17 — 07 — 1907

● ● ●

மறைவு:
24 — 11 — 1989



### இம்மானுவேல் தேவதாசன்

(ஓய்வுபெற்ற அதிபர்)

''என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு''
யோ. 14 : 12

பிரிவால் துயருறும்;
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

ஏழாலை வடக்கு,
ஏழாலை.

(28145)

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை - சுழிபுரம்
## 1994ஆம் ஆண்டிற்கான
# கேள்வி அறிவித்தல்

வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் சுழிபுரம்/ சங்கானை, வட்டுக்கோட்டை ஆகிய நிர்வாகப் பிரதேசத்திற்கு உட்பட்ட கீழ்க் குறிக்கப்பட்ட இறைச்சிக் கடைகள், சந்தைகளுக்கான சீல் வைத்த கேள்விகள் 30 - 11 - 1993ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இவற்றுக்கான கேள்விப்பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் கீழ்க் குறிக்கப்பட்டுள்ள மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப் பணத்தையும் மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணத்தையும் 29 - 11 - 1993ஆம் திகதி பி. பகல் 2. 00 மணிவரை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் 30 - 11 - 1993ஆம் திகதி மு. பகல் 10. 30 மணிக்கு பிரதேசசபைப் பணிமனையில் வைத்து திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் தங்களுடைய குடும்ப அட்டையுடன் சமுகமளிக்க வேண்டும். இது சம்பந்தமான மேலதிக விவரங்களையும், நிபந்தனைகளையும் பிரதேசபை தலைமைப் பணிமனையில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம். நிபந்தனைகளை மீறுமிடத்து கேள்விகளை பின்போடவோ இரத்து செய்யவோ எனக்குப் பூரண அதிகாரம் உண்டு. கொல்களம் சங்கானை உப அலுவலக பகுதியில் (ஓடக்கரை வீதி) அமைக்கப்பட்டிருக்கின்றது. தொழுவம் சங்கானை உப அலுவலகத்தின் முன் அமைக்கப்பட்டிருக்கும். கொல்களக் கட்டணம் அப்போதைய காலப்பகுதிக்கு அமைவாக செலுத்தப்பட வேண்டும்.

### 1994 கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விவரம் | ஏற்றுக் கொள்ளப் படக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை | கேள்விப் பிணைப் பணம் | கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|
| **சுழிபுரம் உப அலுவலகம்** | | | |
| 1. பல்லகட்டிச் சந்தை | 8,080-00 | 100-00 | 50-00 |
| 2. தொல்புரம் மத்திய சந்தை | 440-00 | 100-00 | 50-00 |
| 3. பொன்னாலைச் சந்தை | 1,650-00 | 100-00 | 50-00 |
| 4. மாட்டிறைச்சிக் கடை | 25,000-00 | 250-00 | 50-00 |
| 5. ஆட்டிறைச்சிக் கடை | 1,200-00 | 100-00 | 50-00 |
| **சங்கானை உப அலுவலகம்** | | | |
| 1. ஆட்டிறைச்சிக் கடை | 10,000-00 | 100-00 | 50-00 |
| **வட்டுக்கோட்டை உப அலுவலகம்** | | | |
| 1. மாட்டிறைச்சிக் கடை | 7,500-00 | 100-00 | 50-00 |
| 2. ஆட்டிறைச்சிக் கடை | 7,500-00 | 100-00 | 50-00 |

குறிப்பு: முன்னர் கேள்வி வைப்புப்பணம் செலுத்தியவர்கள் பத்திரப்பணம் மட்டும் செலுத்தி கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

வட்டுக்கோட்டை மாட்டிறைச்சிக் கடை, ஆட்டிறைச்சிக் கடைகள் தங்கள் செலவில் எமது அனுமதியுடன் தாமே வியாபாரத் தளத்தை அமைத்துக் கொள்ள வேண்டும்.

ரூபினி கனகரத்தினம்.
விசேட ஆணையாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேசசபை,
சுழிபுரம்.

வலி மேற்கு பிரதேசசபை,
தலைமை அலுவலகம்,
சுழிபுரம். 15 - 11 - 1993

(சி-6384)

யா/கோண்டாவில் சி. சி. த. க.
பாடசாலை

## எமது வித்தியாலய பழைய மாணவர்

மறத்தமிழர் கர்ம வீரர்

### மாவீரர்
### செல்வன் நடராஜா சிவபாலன்

(ஜீவன்)

அவர்களின்

## மாட்சி நயப்பு அரங்கு



வீரவேங்கை 2ஆம் லெப்டினன்ட்

### ந சிவபாலன் (ஜீவன்)

மைந்தனாய்: 15 — 12 — 1975
மாவீரனாய்; 11 — 07 — 1991

இடம்: பாடசாலை மண்டபம்
காலம்: நாளை 25 — 11 — 1993 வியாழக்கிழமை காலை 9மணி

தலைவர்: திரு. இ. சிவபாதசேகரம் அவர்கள் (அதிபர்)

★ மங்கள விளக்கேற்றல்
★ இறைவணக்கம்
★ மௌன அஞ்சலி
★ தலைமையுரை
★ மாவீரர் குடும்பத்தினர் கௌரவிக்கப்படுதல்

மாட்சி நயப்புப் பேருரையாளர்

1. திரு. செ. சத்தியமூர்த்தி J. P. அவர்கள்
2. திரு. செ. நடராஜா J. P. அவர்கள்
3. திரு. க. மகேஸ் அவர்கள்
4. திரு. எம். எஸ். தயாளன் அவர்கள்
5. திரு. செ. சண்முகவடிவு அவர்கள்
6. திரு. க. ஞானசேகரம் அவர்கள்
7. திரு. க. ம. இராஜேந்திரம் அவர்கள்
8. திரு. க. செல்வநாயகம் அவர்கள்
9. திரு. வே. சண்முகராஜா அவர்கள்
10. திரு. த. மகாசிவம் அவர்கள்
11. திரு. ஆ. இதயன் அவர்கள் (மாணவர் அமைப்பு பொறுப்பாளர்)
12. திரு. சி. எழிலன் அவர்கள் (மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர்)

★ மாட்சிநயப்புப் பேருரையை ஏற்போர் உரை: திரு. நா. நடராஜா

மாவீரர் குடும்பத்தவர், போராளிகள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர், பாடசாலை மாணவர், மற்றுமனைவரும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு அன்பாய் வேண்டுகின்றோம்.

திரு. நா. நடராஜா குடும்பத்தினர்,
பாடசாலை முகாமைத்துவக் குழு.

(28164)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## ஓர் இடத்தில் ஒரு பிழை!

ஸ்ரீலங்கா இராணுவக் கட்டளைப் பீடத்தின் கட்டமைப்பை மீண்டும் ஒரு முறை மாற்றுவது குறித்து அரசாங்கம் பரிசீலனை செய்வதாகத் தகவல்கள் வெளிவந்திருக்கின்றன.

தமிழர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வையே முற்று முழுதாக நாடியிருக்கும் ஸ்ரீலங்கா அரசு, அத்துறையில் பெற்ற வெற்றிகளை — சாதனைகளை — விடவும் படைத்துறைக் கட்டமைப்பில் செய்த மாற்றங்களே அதிகம் எனலாம்.

யுத்த களத்தில் விடுதலைப் புலிகளிடம் தோல்வி அடையும் போதெல்லாம் இராணுவக் கட்டளைப் பீடத்தின் கட்டமைப்பை மாற்றுவது அரசாங்கத்தின் நடைமுறை விதியாகிவிட்டது. அவ்வாறு மாற்றங்களைச் செய்த போதிலும் போர்க்களத்தில் தோல்வியே தொடருகிறது.

ஏதோ ஒரு பிழை, ஏதோ ஓர் இடத்தில் என்று ஆங்கிலத்தில் சாதாரணமாகக் கூறப்படுவதுண்டு. அந்தப் பிழை என்ன, எங்கே உண்டு என்பதனைச் சிங்கள அரசினால் கண்டுபிடிக்க முடியவில்லை. அதுவே அரசின் பலவீனமும் ஆகும்!

விடுதலைப் புலிகள் ஓர் இலட்சியத்துக்காகப் போராடுகிறார்கள். தமிழ் மக்களின் சுதந்திரத்தை வெல்வதற்காகவே அவர்கள் தமது உயிர்களையும் துச்சமென மதித்துக் களமாடுகிறார்கள். தமிழர்களின் சுதந்திரத்தையும், விடுதலையையும் மட்டுமே இலட்சியமாகக் கொண்டு வழிநடத்தும் ஒரு தலைவனின் கீழ் அவர்கள் செயற்படுகிறார்கள்.

எந்த இடர் வரினும், இழப்பு நேரினும் இலக்கை அடைந்தே தீருவது என்ற திடசித்தையுடனும் மதிநுட்பத்துடனும் அந்தத் தலைவன், தனது போர் மூலோபாயங்களையும், உத்திகளையும் வகுத்துச் செயற்படுத்துகிறார். தனது சேனையின் கட்டமைப்பும் செயற்பாடும் எவ்வாறு அமைய வேண்டும் என்பதனைத் தலைவர் பிரபாகரனே முடிவு செய்கிறார். எனவே அவர் திட்டமிடுவது போல, எதிர்பார்ப்பது போல வெற்றிகளை அள்ளிக் குவிக்கிறார். எதிரியின் பலம் அறிந்து, பலவீனம் தெரிந்து, பின்னணி புரிந்து கொண்டு அவர் புதிய உத்திகளையும், போர்த் திட்டங்களையும் செயலாக்குகிறார், தலைவனும் அவரே தளபதியும் அவரே என்று செயற்படுவதால் அரசாங்கத்தையே திகிலடையவும், அச்சம் கொள்ள வைக்கவும் முடிகிறது அவரால்.

ஆனால் அரசாங்கப் படைத்துறை அப்படி அல்ல. அங்கே பல தலைகள் - பல எலிகள். அவை தமது சொந்த நலன்களை முன்வைத்தும், தங்களுடைய கருத்துப் போட்டிகளை நிலைநிறுத்தியும் செயற்படும் போது கட்டமைப்பை எவ்விதமாக மாற்றி என்ன? பல எலிகள் சேர்ந்தும் புற்றெடுக்காத கதை தான்! இந்த பலவீனம் அரசாங்கப் படைகளில் தவிர்க்க முடியாதது.

சம்பளத்துக்காகப் போராடும் சிப்பாய்கள். தமக்குள் ஏற்படும் மரணங்களைக் கண்டு மனோவலிமை குன்றும் சிப்பாய்கள். தமது சொந்த நலன்கள், ஆள் போட்டிகளுடன் செயற்படும் தலைமை அதிகாரிகள். இங்கு மட்டுமல்ல, எந்த அரச படையிலும் காணப்படும் உள்ளகக் குணவியல்புகள் இவை.

இந்தக் குணவியல்புகளுடைய இராணுவம், சுதந்திரம் என்ற இலட்சியத்தை உயிர் மூச்சாகக் கொண்டு போராடும் விடுதலைப் புலி வீரர்களுடனும், அதே இலட்சியத்தையே வாழ்க்கையாகவும், வரலாறும் ஆக்கிக் கொண்ட தானைத் தலைவனுடனும் நிகர்நிற்க முடியாது.

இதனை உணர்ந்தால் தமிழர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமில்லை என்பதனை அரசு இலகுவில் புரிந்து கொள்ள முடியும். அப்போது இராணுவக் கட்டமைப்பு மாற்றங்களும் தேவைப்படா!

# படையினர் இழந்தது ரூ. 100 கோடி

# பெறுமதியான ஆயுதங்கள்!

கொழும்பு, நவ. 24

புலிகளின் பூநகரி முகாம் மீதான தாக்குதலின் போது எமது படையினர் பல உயிரிழப்புகளின் மத்தியில் யுத்தம் புரிந்துள்ளனர். அந்த யுத்தத்தில் 100 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களை படையினர் புலிகளிடம் இழந்துள்ளனர். இது கவலைக்குரிய விடயம் ஆகும்.

எதிர்க் கட்சியைச் சேர்ந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி

## நாடாளுமன்றில் லக்ஷ்மன் ஜெயக்கொடி

நாடாளுமன்ற உறுப்பினர் திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தின் போது மேற்கண்டவாறு கூறினார்.

நேற்று முன்தினம் நிதி ஒதுக்கீடு பற்றிய விவாதத்தைத் தொடக்கி வைத்துப் பேசுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாதுகாப்பு படையினர் கிளாலி சென்று புலிகளுடன் யுத்தம் புரிந்த போது அங்கு அவர்களது படகுகளை அழித்து விட்டுத் திரும்பி விட்டனர். புலிகள் மீண்டும் கிளாலி வந்து படகுச் சேவையை ஆரம்பித்தனர்.

முப்படைகளின் தளபதிகள் யுத்தத்தில் சுயாதீனமாக முடிவுகளை எடுத்துச் செயற்படுவதாகத் தெரியவில்லை ஏனெனில் அவர்களது சேவைக் காலம் முடிந்து மீண்டும் சேவைக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது. எனவே அவர்கள் தங்கள் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கின்றனர்.

தெரிவுக் குழுவின் பரிந்துரையின் படி வடக்கையும், கிழக்கையும் பிரித்து விட்டு அரசு கிழக்கு மாகாணத்துக்கான உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்த வேண்டும்.

இப்படி அவர் கூறினார். (இ-5)

## மாவீரர் எழுச்சி வாரம்

## கோட்ட மட்டத்தில் இன்று நடக்கும் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ. 24

மாவீரர் எழுச்சி வாரத்தை ஒட்டி கோட்டரீதியான கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இன்று புதன்கிழமை கூட்டங்கள் நடைபெறவுள்ள இடங்களும் நேரங்களும் வருமாறு:

★ வலிகாமம் - சண்டிலிப்பாய் வட்டத்தில் மானிப்பாய் மாவீரர் கலையரங்கிலும், உடுவில் வட்டத்தில் சங்குவேலிப் பிள்ளையார் கோயில் முன்றிலிலும் இரவு 7-30 மணிக்கு.

★ தென்மராட்சி - கொடிகாமம் வட்டத்தில் கச்சாய் அ. த. க. பாடசாலையில் இரவு 8-00 மணிக்கு

★ வடமராட்சி - கரவெட்டிக் கோட்டத்தில் சாமணந்தறைப் பிள்ளையார் கோயில் முன்றிலில் இரவு 7 மணிக்கு.

★ தீவகம்—முஸ்லிம் பகுதியில் இரவு 7-30 மணிக்கு

கடற்புலிகள்

யாழ். மாவட்ட கடற்புலிகளின் ஏற்பாட்டில் வலிகாமம் கிழக்கு கொழும்புத்துறை சனசமூக நிலைய அரங்கில் இரவு 7 மணிக்கு. (க)

## மாவீரர் எழுச்சி வார வேலைத் திட்டங்கள்

மாவீரர் எழுச்சி வாரத்தை ஒட்டி வட்ட ரீதியாக மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்களில் இன்று நடைமுறைப்படுத்தப்படும் வேலைகளின் விவரம் வருமாறு:-

கொக்குவில் தென்கிழக்கில் இன்று காலை 9.30 மணிக்கு கிருபாகரன் வீதி துப்புரவு செய்தல், மரம் நடுதல்; கொக்குவில் வடமேற்கில் இன்று காலை 11.30 மணிக்கு குளப்பிட்டி வீதியை கொக்குவில் பாலர் பாடசாலை வரை துப்புரவு செய்தல், மரம் நடுகை, கொக்குவில் கிழக்கில் பிற்பகல் 3 மணிக்கு சிக்கந்தன் வீதியைத் துப்புரவு செய்தல், மரம் நடுதல்.

காலை 9 மணிக்கு சண்டிலிப்பாய் வடக்கிலும், சண்டிலிப்பாய் மேற்கிலும் வெள்ள வாய்க்கால் துப்புரவு செய்தல்; நவாலி கிழக்கில் முருகமூர்த்தி கோயில் துப்புரவு செய்தல்.

காலை 9 மணிக்கு ஏழாலை மத்தியில் பெரியதம்பிரான் கோயிலடியும் ஏழாலை கிழக்கில், ஏழாலை மயானத்துக்குச் செல்லும் வீதியும் துப்புரவு செய்தல்.

காலை 9 மணிக்கு, தொல்புரம் கிழக்கில் வழக்கம்பராய் குளம், மூளாயில் சுடலை வீதி, சித்தன்கேணியில் விஜிதா வீதி ஆகியவற்றைத் துப்புரவு செய்தல்; வட்டுக்கோட்டை தெற்கிலும் சங்கரத்தை துணைவியிலும் மரம் நடுதல். (க)

# யாழ். செல்வது இப்போது சாத்தியமில்லை

## முஹம்மது வெளியிட்ட தகவல்

கொழும்பு, நவ. 24

யாழ்ப்பாணத்துக்கு நான் இப்போதைக்கு விஜயம் செய்வது சாத்தியமான காரியமல்ல.

சபாநாயகர் எம். எச். முஹம்மது 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனுடன் பேச்சு நடத்த யாழ்ப்பாணத்துக்கு செல்வதா, இல்லையா என்ற தனது திட்டம் பற்றிய விவரங்களை வெளியிட விரும்பவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

''திரு. பிரபாகரனுடன் பேச்சுகளை நடத்தி அது தொடர்பான அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க நான் தயாராக இருக்கின்றேன். அந்த இடத்தில் இருந்து அவர்கள் தொடர வேண்டும்''— என்றும் சபாநாயகர் கூறினார். (ஒ-எ)

## தனிநாடு கோருவதற்கு கண்டியருக்கு அதிக உரிமை!

### ஆளும் கட்சி எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, நவ. 24

தனிநாட்டுக் கோரிக்கையை பாரதூரமாக எடுப்பதானால் கண்டியர்களுக்கே தனிநாட்டுக் கோரிக்கையை வலியுறுத்தும் உரிமை அதிகமாக உண்டு.

கண்டி மாவட்ட ஐ. தே. கட்சி எம். பி. திரு. எஸ். பி. கரலியத்த முன்கண்டவாறு தெரிவித்தார்.

கண்டிப் பிரதேசம் 1815 வரை சுதந்திர, இறைமை பெற்ற நாடாக அரசர் ஒருவரின் கீழ் இருந்து வந்தது. தனிநாடு கோரும் உரிமை தமிழருக்குக் கிடையாது என்றும் அவர் சொன்னார். (ஒ-எ)

## அமைச்சர் ரணசிங்க மீது ஒழுக்காற்று விசாரணை

கொழும்பு, நவ. 24

தகவல்துறை ராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்காவின் அரசியல் நடத்தை குறித்து ஆராய்வதற்கு ஒழுக்காற்று விசாரணைக் குழு ஒன்றை ஐக்கிய தேசியக் கட்சி நியமித்திருக்கிறது.

பொதுக் கூட்டங்களிலும் பத்திரிகைகளுக்கும் பிரச்சினைக்குரிய அறிக்கைகளை திரு. ரணசிங்கா வெளியிட்டதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

இவ் விசாரணை பற்றிய தகவல்களை வெளியிட ஐக்கிய தேசியக் கட்சிப் பொதுச் செயலாளர் சிறிசேன குரே மறுத்து விட்டார். (ஒ-எ)

# நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதில்லை என ஐ. தே. க. முடிவு

கொழும்பு, நவ. 24

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பது இல்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பீடம் முடிவு செய்துள்ளது.

அரசமைப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் பற்றி சிபார்சு செய்ய நியமிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் உபகுழு, இம்முடிவை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை — நாடாளுமன்றத்துக்குப் பதில் கூறவேண்டிய வகையில் நிறைவேற்று ஜனாதிபதி முறையில் மாற்றம் செய்வது என்றும் ஐ. தே. க. உபகுழு தீர்மானித்துள்ளது.

அரசமைப்பில் சீர்திருத்தங்களை மேற்கொள்வது பற்றி தீர்மானிக்க நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் ஐ. தே. க. உபகுழுவின் சிபார்சுகள் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ. தே. க. உபகுழுவின் சகல சிபாரிசுகளையும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு ஏகமனதாக ஏற்றுக் கொண்டுள்ளது. (ஒ-எ)

## பொது அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், நவ. 24

இருபாலை தமிழ் மாமன்றம் நடத்தும் மாவீரர் பொது அறிவுப் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மன்ற மண்டபத்தில் நடைபெறும்.

## கிணற்றில் விழுந்த திருடன் விறைத்த நிலையில் மீட்பு!

### சூராவத்தையில் சம்பவம்

ஏழாலை, நவ. 24

இருள் சூழ்ந்த வேளையில் திருட்டுக்கு வந்த மூன்று பேரில் ஒருவன் கிணற்றில் தவறி விழுந்து விட்டான்!

சில மணி நேரம் கிணற்றில் கிடந்ததால் விறைத்த நிலையில் திருடனை காவல்துறையினர் மீட்டு வெளியே எடுத்தனர்!!

சுன்னாகம் சூராவத்தைப் பகுதியில் அண்மையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இது குறித்து மேலும் தெரியவந்ததாவது—

வீட்டு வளவிற்குள் இரவு 7.45 மணியளவில் திடீரென மூவர் பிரவேசித்தனர். இவர்களைக் கண்ட வீட்டுக்கார பெண்மணி கத்திக் குழறினார். வந்தவர்கள் பெண்மணியின் கழுத்தை நெரித்து வாயில் துணியைத் திணிக்க முயன்றனர். அவர்களின் முயற்சி தோல்வியடைந்து பெண்மணி உரக்க குழறத் தொடங்கினர்.

திருடர்கள் மூவரும் திக்குத் திசை தெரியாமல் ஓடத் தொடங்கினார். அப்போது ஒருவன் தற்செயலாக கிணற்றில் விழுந்து விட்டான். திருடன் விழுந்தது வீட்டாருக்குத் தெரியவில்லை.

திருடன் வெளியேவர பலமுறை முயற்சித்தும், வெற்றி கிட்டவில்லை. எஸ்லோன் பைப் மூலம் ஏறிவர முயன்ற போது வழுக்கி வழுக்கி மீண்டும் மீண்டும் உள்ளே விழுந்தான் திருடன்.

சத்தம் கேட்ட போது கிணற்றில் தேங்காய் அல்லது ஓலைகள் விழுவதாக வீட்டார் எண்ணிவிட்டனர்.

இரவு சில மணிநேரத்தின் பின்னர் கிணற்றினுள் கிடந்தபடி ஒருவன் சத்தமிடவே, வீட்டார் அயலவரின் உதவியுடன் சுன்னாகம் காவல்துறைக்கு அறிவித்தனர்.

விறைத்துக் கிடந்த திருடனை காவல்துறையினர் மீட்டெடுத்துக் கூட்டிச் சென்றனர். (ஒ-45)

# அரசுக்குச் சொந்தமான யாழ். ஆஸ்பத்திரியில் அரச படையினர் சிகிச்சை பெற முடியவில்லை

## பிக்கு பெரமுனவின் கவலை

யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரி அரசாங்கத்துக்குச் சொந்தமானது. அங்கு பணியாற்றுபவர்களுக்குப் பொது நிதியில் இருந்தே சம்பளம் வழங்கப்படுகிறது. ஆனால் அங்கு அரச படையினர் சிகிச்சை பெறமுடியவில்லை.

ருகுணு ரட்ட பிக்கு பெரமுன என்னும் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் முன்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

''கிளாலி இராணுவ நடவடிக்கை காரணமாக மோசமான பின்னடைவைச் சந்தித்ததாகக் கூறப்பட்ட எதிரியினால், பலம்பொருந்திய பூநகரி இராணுவ, கடற்படைத் தளங்களை விரைவாக எப்படி கைப்பற்ற முடிந்தது என்பதை எம்மால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

இதற்கு இராணுவ மற்றும் கடற்படைக் கட்டளைப் பீடங்கள் தான் பதில் சொல்ல வேண்டும்.

இப்பேரழிவுக்குப் பொறுப்பானவர்கள் அதன் விளைவுகளை ஏற்க வேண்டும். அவர்களை கட்டளைப் பொறுப்பில் இருந்தும் பதவியில் இருந்தும் விடுவிக்க வேண்டும்.

இப்படி ஒரு தாக்குதலை எதிர்பார்க்கத் தவறியதும், இப்படி ஒரு தாக்குதல் இடம் பெறும் பட்சத்தில் அதனைச் சமாளிக்கத் தயார் நிலையில் இல்லாதிருந்ததும் ஒரு புறமிருக்க —

*அவமானம் நிறைந்த பேரழிவு*

இந்த துக்ககரமான — அவமானம் நிறைந்த பேரழிவுக்கு இரண்டு அடிப்படைக் காரணங்கள் உள்ளன என்பது தெளிவாகிறது. அவையாவன:-

ஒன்று — தமிழ் பயங்கரவாதமாக மாறியுள்ள தமிழ்ப் பிரிவினைவாதப் பிரச்சினைக்கு அரசாங்கத் தரப்பில் அரசியல் நோக்கம் ஒன்று பூரணமாக இல்லாமை.

இரண்டு — இராணுவத் தலைமைக் கட்டளைப் பீடத்திடம் யுத்த உத்தி ஒன்று இல்லாமை.

யாழ். போதனா ஆஸ்பத்திரி அரசினால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதனை செஞ்சிலுவை சங்க சர்வதேசக் குழு மேற்பார்வை செய்கிறது. அங்கு பணிபுரியும் டாக்டர்களுக்கும் ஊழியர்களுக்கும் பொது நிதியில் இருந்து சம்பளம் வழங்கப்படுகிறது மருந்துகள் மற்றும் உபகரணங்களை அரசே வழங்குகின்றது.

*அரச படையினருக்கு சேவை கிடைப்பதில்லை*

கொழும்பு பெரியாஸ்பத்திரியிலும் பார்க்க சிறந்த வசதிகள் இல்லாவிடினும் சமமான வசதிகளை கொண்டு யாழ். ஆஸ்பத்திரி உள்ளது. [illegible] பின் சேவைகள் அரசின் [illegible] கிடைப்பதில்லை.

வடபகுதி யுத்த முனையில் காயமடைந்த படையினருக்கு அவசர சிகிச்சை அங்கு வழங்க முடியாமல் உள்ளது. எதிரிகளுக்கு மட்டுமே அங்கு வசதிகள் கிடைக்கின்றன. வைத்திய வசதிகளை எதிரிகளுக்கு வழங்கிக் கொண்டு— அவ்வசதிகளைச் செய்து கொடுத்துள்ள அரசின் படையினருக்கு அவ்வசதிகளை வழங்க மறுக்கும் ஓரிடமாக யாழ். ஆஸ்பத்திரி உலக வரலாற்றில் ஓர் உதாரணமாக விளங்குகின்றது.

*என்ன பயன்?*

அரசின் சொந்தப்படையினருக்கு யாழ். ஆஸ்பத்திரியின் வசதிகளைச் செய்து கொடுக்க முடியாத செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினால் என்ன பயன்?

இப் பணியை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவால் நிறைவேற்ற முடியாவிட்டால் அல்லது விருப்பமில்லாது இருந்தால் அவர்களை இந்த நாட்டை விட்டு உடனடியாக வெளியேற்ற வேண்டும்.

எமது படையினரை எதிர்த்து யுத்தம் நடத்தும் எதிரிக்கு வைத்திய வசதிகள் வழங்குவதை அரசு நிறுத்த வேண்டும். எமது படையினர் யுத்த முனையில் காயப்பட்டு இறக்கவிடப்படுகின்றார்கள் அல்லது கொல்லப்படுகிறார்கள். ஆனால் விடுதலைப் புலிகள் காயமடைந்த தங்கள் போராளிகளை யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி சிகிச்சை பெற வைத்து மீண்டும் சண்டைக்கு அனுப்புகின்றனர்.

— இப்படிக் கூறும் அந்த அறிக்கையில் ருகுணு ரட்ட பிக்கு பெரமுனவின் தலைவர் [illegible] ஓமாரே காஸப்பா கை யெழுத்திட்டுள்ளார். (ஒ-எ)

## கொழும்பு மாநகரில்

## பிரேத வாகனங்களிலும் அம்புலன்ஸ்களிலும் குண்டு!

### விடுதலைப் புலிகள் திட்டமாம்

கொழும்பு, நவ. 24

கொழும்பு மாநகரில் குண்டுகளையும் வெடிப்பொருள்களையும் எடுத்துச் செல்ல விடுதலைப் புலிகள் அம்புலன்ஸ் மற்றும் பிரேதங்களை எடுத்துச் செல்லும் வாகனங்களைப் பயன்படுத்தத் திட்டமிட்டிருப்பதாக பொலீஸார் தெரிவித்தனர்.

இவ் வாகனங்களின் நடமாட்டம் அவ்வளவு சந்தேகத்தை ஏற்படுத்தாது என்ற காரணத்தினால் தான் விடுதலைப் புலிகள் இந்த உத்தியைக் கையாளத் திட்டமிட்டுள்ளனராம்.

இதன் காரணமாக அம்புலன்ஸ் மற்றும் பிரேத வாகனங்களையும் மறித்துச் சோதனையிடுவதில் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வடபகுதியில் ஏற்பட்டுள்ள பிந்திய நிலைவரப்படி, கொழும்பில் விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் நடத்தும் சாத்தியத்தை அரசு நிராகரிக்கவில்லை என்றும்—

இம்மாதம் 13 ஆம் திகதியில் இருந்து கொழும்பு மற்றும் அதன் சுற்றுப் புறங்களின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் ''த ஐலண்ட்'' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

பூநகரி முகாம் புலிகளிடம் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து கொழும்பு மாநகரின் பாதுகாப்பும் [illegible] பட்டுள்ளதாக [illegible] தெரிவித்தது. [illegible]

## வெசாக் தினத்திற்குப் பின் எந்நேரத்திலும் தேர்தல்!

### கால அட்டவணை தயாராம்

கொழும்பு, நவ. 24

அடுத்த ஆண்டு வெசாக் தினத்துக்குப் (மே மாதம்) பின்னர் ஜனாதிபதித் தேர்தலை எந்த நேரத்திலும் நடத்தக் கூடியதாக, அதற்கேற்ற வகையில் கால அட்டவணை ஒன்றைத் தயாரித்து செயல்படுத்துவதில் ஆளும் ஐக்கிய தேசியக்கட்சி ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையில்—

அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பான சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு தேவையான மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற நாடாளுமன்றத்தில் உள்ள உதிரிக்கட்சி எம். பிக்களினதும் அனுரா ஆதரவு சுதந்திரக்கட்சி எம்.பிக்களினதும் ஆதரவை நாடுவது என்றும் ஆளும்கட்சியினர் தீர்மானித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சபாநாயகரைத் தவிர்த்துப் பார்த்தால் நாடாளுமன்றத்தில் 124 ஐ. தே. க. எம்.பிக்கள் உள்ளனர். 3இல் 2 பங்கு பெரும்பான்மை பெற மேலும் 26 எம்.பிக்களின் ஆதரவு தேவைப்படுகிறது.

இதேவேளை, ஆளும்கட்சிக்கு ஆதரவாக வாக்களிக்கும் எதிர்க்கட்சி எம்.பிக்கள் தங்கள் எம். பி பதவிகளை இழக்காமல் இருப்பதை உறுதி செய்யக்கூடிய விதத்தில் தேர்தல் சட்டத்தில் தேவையான திருத்தங்களைச் செய்வதற்கும் அரசு முன்வந்துள்ளது.

இது தொடர்பான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் விரைவில் அரசினால் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-எ)

## தொழுதேற்றிப் பூசிக்கின்றோம்!

வழிகாட்டி நின்று வருப்பகையை வென்றீர்
வரலாறு படைத்து நின்றீர்
தெளிவான சிந்தை திடமான செயலில்
தியாகங்கள் புரிந்துசென்றீர்
ஒளியேற்றி வைத்து உமைப்பாடி நின்றோம்.
உயிரோடிணைந்த உறவாய்
விழிநீரைச் சிந்த வீழ்ந்துங்கள் பாதம்
தொழுதேற்றிப் பூசிக்கின்றோம்.

- கோகுலன்.

மாரியிலே மரம் பல வை - மறக்காமல்
மற்றவரையும் வைக்கச் செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
09-10-1961

உதிர்வு:
28-11-1990

திதி:
24-11-1993

## கிருஸ்ணபிள்ளை ஸ்ரீதரன் (ஆமி ஸ்ரீ)

(லங்கா சீமெந்து லிமிட்டெட்)

மூன்றாண்டு மறைந்ததையா!
எம் ஸ்ரீயே எமைப் பிரிந்து
பாசதீபம் அணைந்து விட்டது பாரினிலே
நாம் பாதை தெரியாமல் தவிக்கின்றோம்
ஆளொரு திக்காய் சிதறிக் கிடக்கின்றோம்.
ஆறுதல் நீயின்றி அவனியில் நாம் கலங்குகின்றோம்.
இனி எங்கே உமைக் காண்போம்.
இறைவனில் உமது ஆன்மா சாந்தி பெற
பிரார்த்திக்கின்றோம்.

தாய், சகோதரன், சகோதரிகள்,
மனைவி, மகன், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

மயிலங்கூடல், இளவாலை.
தற்போதைய முகவரி:
''லங்காதேவி''
உடுவில். (6725)

# மரண அறிவித்தல்கள்

திருமதி
## றெஜினா அந்தோனிப்பிள்ளை

ஊர்காவற்றுறை, தபாற்கந்தோர் அருகில் முன்னர் வசித்தவரும், தற்போது பாண்டியன்தாழ்வில் வாழ்ந்தவருமான திருமதி றெஜினா அந்தோனிப்பிள்ளை காலமானார்.

இவர் திரு. நீ. அந்தோனிப்பிள்ளையின் அருமை மனைவியும், திருமதி விக்ரறின் ஜூலியற், திருமதி கிளாறா மரியநாயகம், ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு விஸ்திரின், திரு. S. L. மரியநாயகம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 24-11-93, புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்
கிளாறா
(மகள்)

பாண்டியன்தாழ்வு. (28165)

## எட்வேட் வில்லியம் வேலுப்பிள்ளை துரைராஜா

மட்டக்களப்பு திருக்கோவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. எட்வேட் வில்லியம் வேலுப்பிள்ளை துரைராஜா அவர்கள் 20-11-93 வெள்ளிக்கிழமையன்று டென்மார்க்கில் காலமானார்.

அன்னார் றோஸ் மனோன்மணியினது (டென்மார்க்) அருமைக் கணவரும், வைத்தியகலாநிதி T. W. ஜெயகுலராஜா (தனியார் வைத்தியசாலை, ஆனைப்பந்தி), மிருணாளினிதேவி (டென்மார்க்), பத்மினிதேவி (U.K.), ஜெயானந்தராஜா (நைஜீரியா), வண. Sam ஜெயதிலகராஜா (U.K.), ஜெயகுமாரி (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞானதிலகராணி (ஆசிரியை யா / திருக்குடும்பக் கன்னியர் மடம்), காலஞ்சென்ற D.K. பாக்கியம், சிறில் ரஞ்சித், பிரேமிளா, ஹில்டா (U.K.), தேவராஜா (டென்மார்க்) ஆகியோரின் மாமனாரும் ஜேகன் (மாணவன், யா/பரியோவான் கல்லூரி), தர்ஷினி, சுரேஷ் (டென்மார்க்), கிறிஸ்ரபெல் (U.K.), யோஎல், யோஆனா (U.K.): யாழினி, வினோத் (டென்மார்க்) ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

இவரது நல்லடக்கம் இன்று (24-11-93) டென்மார்க்கில் நடைபெறும் வேளையில் அன்னாருக்கு அஞ்சலி செலுத்தும் ஜெபக்கூட்டம் இல. 10 பழைய பூங்கா வீதியில் உள்ள இல்லத்தில் மாலை 4-30 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்
வைத்தியகலாநிதி ஜெயகுலராஜா
(மகன்)

10, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம். (6393)

## வல்லிபுரம் சின்னையா

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த வல்லிபுரம் சின்னையா நேற்றிரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் தம்பதிகளின் புதல்வனும், காலஞ்சென்ற இராசமணியின் அன்புக் கணவரும், டாக்டர் குலசிங்கத்தின் (அமெரிக்கா) அருமைத் தந்தையாரும் —

டாக்டர் கமதி குலசிங்கத்தின் (அமெரிக்கா) அன்பு மாமனும், சுகன்யா, சத்தியஜித் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பொன்னம்பலம், நல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று நண்பகல் 12 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி தெற்கு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்
திருமதி ருக்மணி ஆனந்தவேல்

கந்தசுவாமி கோயிலடி,
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (28166)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 24-11-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# ஆண்டிறுதித் தேர்வு: நேர அட்டவணை

யாழ்ப்பாணம், நவ. 24

ஆண்டு 4 முதல் ஆண்டு 10 வரையான வகுப்புகளுக்குரிய ஆண்டிறுதிப் பரீட்சையின் நேர அட்டவணை மாற்றம் குறித்து கல்வித் திணைக்களம் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவித்திருக்கிறது.

புதிய மாற்றங்களின் விவரம் வருமாறு:-

★ ஆண்டு 6, 7 மாணவர்களுக்கான பரீட்சைகள் நவம்பர் 29, 30 டிசம்பர் 1, 2 ஆகிய திகதிகளில் நடைபெறும்.

★ நவம்பர் 30 ஆம் திகதி பிற்பகல் ஆண்டு 7 மாணவர்களுக்கான வாழ்க்கைத்திறன் பாடம் மட்டும் நேர அட்டவணைப் பிரகாரம் நடைபெறமாட்டாது. ஆண்டு 7 மாணவர்களுக்கான வாழ்க்கைத்திறன் பாடம் ஆண்டு 8 மாணவர்களுடன் சேர்த்து டிசம்பர் 20 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11.30 முதல் பிற்பகல் 1.30 வரை நடைபெறும்.

★ ஆண்டு 9 மாணவர்களுக்கான கனிஷ்ட தொழில் நுட்பப் பாடம் மட்டும் ஜி.சி.ஈ. (சா. த.) பரீட்சைத் திகதிகளுக்கு முன்னர் நடத்தத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. ஆகவே ஆண்டு 9 மாணவர்களுக்கான கனிஷ்ட தொழில் நுட்பப் பாடம் மட்டும் அட்டவணை ஒழுங்குக்கு மாறுபட்டு டிசம்பர் 2 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை நடைபெறும். ஆண்டு 9 மாணவர்களுக்கான ஏனைய பாடங்கள் ஆண்டு 8, 10, மாணவர்களுடன் சேர்த்து டிசம்பர் 16 முதல் 21 வரை நடைபெறும்.

★ ஆண்டு 4, 5 மாணவர்களுக்கான பரீட்சை டிசம்பர் 1, 2 ஆம் திகதிகளில் நடைபெறும்.

இரண்டாம் கட்ட வினாத்தாள் விநியோகம் நாளை நடைபெறும் என அதிபர்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அது ஒத்திவைக்கப் பட்டிருக்கிறது. எதிர்வரும் 29 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு இரண்டாம் கட்ட விநியோகம் நடைபெறும். [உ]

## தொண்டமானின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்திகள் தெரிவித்தன.

அரசுக்குச் சொந்தமான சுமார் 450 பெருந்தோட்டங்களை தனியார் நிறுவனங்கள் நிர்வகித்து வருகின்றன.

இவை தமது ஐந்தாண்டு கால ஒப்பந்தங்களை முப்பது ஆண்டுகள் வரை நீடிப்பதற்கு அரசிடம் சில நிபந்தனைகளைச் சமர்ப்பித்துள்ளன.

அந்த நிபந்தனைகள் வருமாறு:-

★ குறைந்த வட்டியில் நிதி வசதிகள் நிறுவனங்களுக்கு அரசு வழங்க வேண்டும்.

★ பெருந்தோட்டங்களின் நிர்வாகங்களில் அரசியல் தலையீடு இருக்கக் கூடாது.

★ பெருந்தோட்டத் தொழிலாளருக்கு வருடத்தில் 300 நாள் வேலை வழங்கப்பட வேண்டும் என வற்புறுத்தக் கூடாது.

— இந்த நிபந்தனைகளுக்கு அரசாங்கம் இணங்கும் என்று அரசுடன் தொடர்புடைய உயர்நிலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நிபந்தனைகளுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. (உ-எ-6)

## கொட்டும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாவீரர் நினைவுக்கொட்டகைகள் பரவலாக அமைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்ச்சிகள் நடைபெற்று வருவதாகவும், அவர்கள் அறிவித்துள்ளனர்.

வடமராட்சிப் பகுதியில் மிகப் பெரும் எண்ணிக்கையான நினைவுப் பந்தல்களும் கொட்டகைகளும், அலங்கார வளைவுகளும் அமைக்கப்பட்டுள்ளன. புறாப்பொறுக்கியில் இருந்து பஸ் நிலையம் வரை 22 பெரிய பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை பழைய பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள. கடற்புலிகளின் பந்தல் 120 அடி நீளமும் 20 அடி அகலமும் உடையது. அதன் முன்னால் 75 அடி நீள அலங்காரப் பந்தலும் அமைக்கப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பகுதியில் நினைவுக் கொட்டகைகள் அமைந்த பகுதியால் செல்லும் பயணிகள் தமது வாகனங்களை விட்டு இறங்கி மாவீரர் திருவுருவப் படங்களுக்கு அஞ்சலி செலுத்தி விட்டே செல்கின்றனர்.

யாழ்ப்பாணம் ஆரிய குளத்தில் மாவீரர் நினைவாக ஐந்து அடி உயர விளக்கொன்று மிதக்க விடப்பட்டுள்ளது. அதில் சிவப்பு, மஞ்சள் நிறங்கள் ஒளிரக்கூடியதாக ''சிம்னிகள்'' அமைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் ஆறாம் குறுக்கு வீதியில் பாங்சால் வீதிச் சந்தியில் மாவீரர் ஒருவரை புலிவீரர் ஒருவர் இரு கரங்களிலும் ஏந்தி வரும் சிலை வடிக்கப்பட்டு, விசேட தூபி பீடத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. தத்ரூபமான இச்சிலையை பெரும் எண்ணிக்கையான மக்கள் பார்த்து வருகின்றனர்.

சுன்னாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் கூடத்தில் தினமும் பெரும் எண்ணிக்கையான மக்கள் திரண்டு அஞ்சலி செலுத்துகின்றனர். வீதியால் பயணம் செய்யும் அனைவரும் நினைவு கூடத்தில் தரித்து நின்று இரண்டு நிமிட மௌனாஞ்சலி செலுத்திய பின்னரே பயணத்தைத் தொடருகின்றனர். (அ-3-15-9-162-17-51-13)

## யாழ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருவார்களா என்ற கேள்வியும் எழுந்திருக்கிறது.

அவர்களில் கணிசமான எண்ணிக்கையினர் கல்வி பயில வராவிட்டால் நிதி ஒதுக்கீடு மேலும் குறைக்கப்படும் சூழ்நிலை உருவாகும்.

தற்போது ஒதுக்கப்பட்டிருக்கும் நிதி யாழ். பல்கலைக் கழகத்தின் ஆளணி மற்றும் பராமரிப்புச் செ[illegible]க்குக் கூட போதுமானதாக இருக்குமா என்ற [illegible] எழுப்பப்பட்டிருக்கிறது. (உ-3)

## தி.மு.க...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

கட்சிப் பிளவு இப்படி நேற்று வெளிப்பட்டதற்கு வலிமை மிக்க மாவட்டச் செயலாளர்கள் எட்டுப்பேரை நேற்று முன்தினம் தி.மு.கவில் இருந்து வெளியேற்றி பொதுச் செயலாளர் அன்பழகன் அறிக்கை வெளியிட்டதே காரணம் எனலாம்.

கருணாநிதியின் ஆணையை ஏற்று அன்பழகன் இந்த அறிவிப்பைச் செய்தார்.

இதனால் கட்சியின் சட்டமன்றப்பிரிவு, இளைஞர் அணி, தொழிலாளர் பிரிவு, மாணவர் அமைப்பு என அனைத்து பிரிவுகளிலும் பிளவு ஏற்பட்டுள்ளது.

கருணாநிதி, தனிக்கட்சி தொடங்கிப் பாருங்கள் என்று கோபாலசாமிக்கு சவால் விட்டார்.

ஆனால் கோபாலசாமியோ தி.மு.கவைக் கைப்பற்றவே முயல்கின்றார்.

அதாவது தி.மு.கவின் கொடி, சின்னம், சொத்து, கட்சித் தொண்டர் பணத்தால் கட்டப்பட்ட அண்ணா அறிவாலயம் என பலவற்றையும் கைப்பற்ற அவர் முயல்கிறார்.

பல்லாயிரம் சடலங்கள் மீது நடந்தே கோபாலசாமி அறிவாலயத்துக்குள் நுழைய முடியும் என்று கருணாநிதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கருணாநிதிக்கு விசுவாசமான ஆயிரம் தி.மு.க. தொண்டர்கள் அண்ணா அறிவாலயத்தை காவல் புரிந்து வருகின்றனர்.

திராவிடக் கட்சிகளின் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் —

ஒவ்வொரு பிளவின்போதும் பிரிந்து சென்ற குழுவே செல்வாக்குள்ள கட்சியாக மாறி வந்துள்ளதைப் பார்க்கலாம்.

திராவிடர் கழகத்தில் இருந்து 1949 இல் அண்ணா பிரிந்து வந்து தி.மு.கவை அமைத்தார்.

1967 இல் தி.மு.க. ஆட்சியைக் கைப்பற்றியது. எம்.ஜி.ஆர். 1972 இல் தி.மு.கவில் இருந்து வெளியேற்றப்பட்டார். 1977இல் எம்.ஜி.ஆரின் அ.தி.மு.க. ஆட்சியைப் பிடித்தது.

தற்போது கோபாலசாமி மாவட்டங்களில் சுற்றுப் பயணஞ் செய்தபோது —

அவருக்கு மக்கள் அளித்த ஆதரவைப் பார்க்கும்போது தி.மு.க. வில் உள்ள இளைஞர்களின் ஆதரவு அவருக்கு 'கட்டித் தயிர் போல் கெட்டியாக' கிடைத்து விட்டது போலத் தெரிகிறது.

தி.மு.க.ஆட்சியைப் பிடிக்க ஏதுவான ஒரு தருணத்தில் அக்கட்சியில் இப்போது பிளவு [illegible] குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு [illegible]டத்தில் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## இன்று

யாழ்ப்பாணம், நவ. 24

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட, கமக்காரர் அறிமுக அட்டை விநியோகம் இன்று புதன்கிழமை யாழ் மாவட்டத்தின் 3 கோட்டங்களில் பின்வரும் இடங்களில் நடைபெறும்.

வலிகாமம் கோட்டம் — பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.

வடமராட்சிக் கோட்டம் — பிற்பகல் 4 மணிக்கு மாலுசந்தி சின்னத்தம்பி வித்தியாசாலை.

தென்மராட்சிக் கோட்டம்— பிற்பகல் 3 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாசாலை. (த)

★ ★ ★

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் பொது முகாமையாளர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. வை. செந்திநாதன் தலைமையில் நடைபெறும். (த)

★ ★ ★

மாவீரர் வாரத்தை ஒட்டி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரின் ஏற்பாட்டில் இன்று நண்பகல் 12 மணிக்கு கெற்பலியில் மாவீரர் சோலை மரநடுகைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட உள்ளது.

காடு வளர்ப்பினையும், மரநடுகையினையும் ஊக்குவிக்கும் முகமாக இத் திட்டம் ஆரம்பிக்கப்பட உள்ளது. (த)

## பெண் மர்ம மரணம்

தாளையடி, நவ. 24

சந்தைக்கு வியாபாரத்திற்குச் சென்ற பெண், மர்மமான நிலையில் கொலையுண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆழியவளையிலிருந்து இடம்பெயர்ந்து, தற்போது செம்பியன்பற்றில் வசித்துவந்த திருமதி இ. பரமேஸ்வரி (வயது 35) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயாரே கொடூரமான முறையில் கொலையுண்டிருக்கிறார்.

இவரின் சடலம், அவர் காணாமற்போன நான்காவது நாளான கடந்த ஞாயிறன்று எழுதுமட்டுவாழ் — நாகர் கோவில் வீதியில் கண்டல் மரக் காட்டிலுள்ள — நீர் தேங்கியுள்ள — ஏரிப்பகுதியில் மிகவும் சிதைவடைந்து உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டு அடையாளம் காட்டப்பட்டது. (உ-144)

## கோபாலசாமி..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

(தென் ஆற்காடு), எம். செல்வராஜா (திருச்சி), லட்சுமணன் (நெல்லை), ரத்னராஜ் (கன்யாகுமரி), பொன். முத்துராமலிங்கம் (மதுரை) ஆகியோரே நேற்று முன்தினம் வெளியேற்றப்பட்டனர்.

செங்கை மாவட்டச் செயலாளரான மதுராந்தகம் ஆறுமுகம் கடந்த வாரமே தி.மு.கவிலிருந்து வெளியேற்றப்பட்டு விட்டார் என்பது தெரிந்ததே.

தி. மு. கவின் சட்டக் குழு உறுப்பினர் எல் கணேசனும் கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக தி. மு. க. தலைமைப் பீடத்தினால் வெளியேற்றப்பட்டிருக்கின்றார்.

இதற்கிடையில் —

கோபாலசாமிக்கு ஆதரவான மாவட்டச் செயலாளர்களை கட்சியிலிருந்து வெளியேற்றிய பின்னர்—

கோபாலசாமி அணியினர் விவகாரம் தொடர்பாக ஆராய தி. மு. கவின் செயற்குழு நாளை சேலத்தில் கூடும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-எ)

# அரச சார்பற்ற நிறுவன உதவிகள் குறைப்பு

யாழ்ப்பாணம், நவ. 24

யாழ். மாவட்டத்தில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான உதவிகளை வெளிநாட்டு அமைப்புக்கள் குறைத்துள்ளன.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தது.

யாழ். மாவட்டத்தில் இயங்கும் சர்வதேச அமைப்பாக இருந்தால் என்ன உள்ளூர் அமைப்பாக இருந்தால் என்ன அவற்றின் செயற்பாட்டுக்கான நிதி உதவிகளை அவற்றின் தலைமையகங்களும், உதவி வழங்கும் நிறுவனங்களும் மட்டுப்படுத்தி உள்ளன என்றும்—

இங்கு மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் முன்னேற்றம் குறித்து நேரில் ஆராய முடியாதுள்ளது என அவை காரணம் காட்டுவதாகவும்— யாழ். மாவட்ட இணையம் தெரிவித்தது. (இ-3)

## நாளை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் விவசாயிகள் மற்றும் பொது மக்களின் நன்மை கருதி உருவாக்கப்பட்டுவரும் நாற்று மேடைத் திட்டத்தின் முதற் கட்டமாக —

நாளை வியாழன் பிற்பகல் 3 மணிக்கு மானிப்பாய் கிழக்கு உற்பத்திகுழு பிரிவில் நாற்று மேடை அங்குரார்ப்பண வைபவம் ஒன்று இடம்பெறும். (த)

★ ★ ★

தமிழீழ மாவீரர் வாரத்தை ஒட்டி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராம மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புத்தூர் வாதரவத்தை எழுச்சிக் கிராமப் பகுதியில் நாளை காலை 10 மணிக்கு காடு வளப்புத் திட்டம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. (த)

## மனித உரிமைகள்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

போன சம்பவங்கள் குறித்து சுயேச்சையான விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும் என்றும் அத்தீர்மானத்தில் கோரப்பட்டிருந்தது. கடந்த 3 ஆண்டுகளில் இலங்கையில் தென்பகுதியில் 250க்கு ஒருவர் கொல்லப்பட்டோ அல்லது காணாமற் போயோ உள்ளனர் என்பது தமக்கு அதிர்ச்சியைத் தந்ததாக திருமதி கிறிஸ்டியன் ஒடி தெரிவித்தார். (உ-எ)

## அறிமுக அட்டை

மாவீரர் வாரத்தை ஒட்டி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய மேம்பாட்டுத் திட்டம், சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டம் ஆகியவற்றின் கீழ் தமிழீழத்தில் உற்பத்தியை மேற்கொள்ளும் உற்பத்தியாளர்களுக்கான அறிமுக அட்டை நாளை பிற்பகல் 3 மணிக்கு சகல கோட்டங்களிலும் வழங்கப்படும். (த)

## விரிவுபடுத்த நடவடிக்கை

அரியாலை, நவ. 24

யாழ். பிரதேச செயலகம் இன்று முதல் விரிவுபடுத்தப்பட உள்ளது. இதன் ஒரு கட்டமாக பிரதேச செயலகத்தின் பெரும்பாலான பிரிவுகள் யாழ். பழைய பூங்கா வீதியில் உள்ள சைனீஸ் ஹோட்டல் கட்டடத்திற்கு இன்று இடமாற்றம் செய்யப்படும்.

எனினும் உணவு முத்திரைப் பகுதியும், கணக்காளர் பகுதியும் முன்னைய இடத்திலேயே இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-17)

## ஞாயிறன்று..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சலுகை வழங்கப்படல் வேண்டும்.

இக்கோரிக்கைகளுக்கு அரசு இணங்காவிடில் தொழிற் சங்கம் மற்றும் அரசியல் ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டி நேரிடும் என்று திரு. செல்லச்சாமி பி.பி.ஸி.பேட்டியில் தெரிவித்தார்.


## G. A. Q. 94/95

(பேராதனைப் பல்கலைக்கழகம்)

★ A/L இல் 3 பாடங்கள் சித்தியடைந்தவர்கள் (கலை, விஞ்ஞானம், வர்த்தகம்) பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

★ இதற்கான பல்கலைக்கழக பதிவுகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

★ இதற்கான விவரங்களையும் விண்ணப்பப்படிவத்தினையும் நேரில் பெற்றுக் கொள்ளவும்.

விரிவுரைகள் ஆரம்பம்: **28-12-93** (11 மணி)

விவரங்களுக்கு:

ஸ்ரீ அருள் நங்கை
புதிய உயர் கல்லூரி
ஆரிய குளம் சந்தி, யாழ்.
(சி-6558)


## வேம்படி மகளிர் கல்லூரி

பழைய மாணவி — ஆசிரியை — கனிஷ்ட பிரிவுத் தலைமை ஆசிரியை — இடைநிலைப் பிரிவு மேற்பார்வையாளராக 33 வருடகாலம் பெருமதிமிக்க சேவையாற்றிய

பழைய மாணவர் சங்க உபகாப்பாளர்

### செல்வி சோபிதமலர் சின்னத்தம்பி

அவர்களின் பிரிவால் துயருறும் வேம்படி பழைய மாணவர்கள் நம் கண்ணீரால் அன்னாருக்கு அஞ்சலி செலுத்தி ஆறுதலடைகிறோம்.

(சி/6392)




நீத்த, நீத்தம் புத்தம் புதிய நகைகளை
அறிமுகப்படுத்துவதில்
இன்றல்ல என்றென்றுமே நகைப்பிரியர்கள்
மனங்களில்
நகைத் தெரிவின் இளவரசியாக திகழ்பவள்

சிறி நதியா நகை மாளிகை

"தங்க நகை உலகின் நம்பிக்கை நட்சத்திரம்"

# சிறிநதியா நகைமாளிகை

2 G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-6394)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org